
# கீதாசார்யன்-25




தொகுதி 3 | ரௌத்ரி ௵ | ஐப்பசி ௴ | அக் 80 | பகுதி 1


ஆசிரியர் :

M. A. வேங்கடகிருஷ்ணன், M.A., M.Phil.

இயக்குநர் குழு :

P. T. சுந்தரவரதன்
நிதி இயக்குநர்

N. கணபதி
விற்பனை இயக்குநர்

R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்பு இயக்குநர்

P. T. ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

ஆலோசகர் குழு :

சாண்டில்யன் (தலைவர்)

K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்

Dr. V. V. ராமாநுஜம்

S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார்

K. E. B. ரங்கராஜன்



7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

★

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா ரூ. 12/-

# ஸ்ரீமத் பகவத் கீதை

## இரண்டாமத்யாயம்

தேஹிநோஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா
ததா தேஹாந்தரப்ராப்தி: தீரஸ்தத்ர நமுஹ்யதி (13)

இந்த உடலில் இருக்கும் ஆத்மாவுக்கு எப்படி இளமை, வாலிபம், கிழத்தனம் ஆகியவை உண்டாகின்றனவோ அப்படியே, இந்த தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தை அடைவதும் ஏற்படுகிறது. அறிவாளியாய் இருப்பவன் இது குறித்து வருந்துவதில்லை.

முன் சுலோகத்தில் ஆத்மாக்கள் நித்யமானவர்கள் என்று கூறப்பட்டது. இது உண்மையானல் பிறப்பு இறப்பு முதலியவை ஏன் உண்டாகின்றன என்ற கேள்வி எழும். அதற்கு இந்த சுலோகம் விடை அளிக்கிறது. ஆத்மா ஒரு உடலை அடைகிறான். அந்த ஆத்மா அவ்வுடலில் முதலில் குழந்தையாயிருக்கிறான். பிறகு வாலிபத்தையடைகிறான். முடிவில் கிழத்தனத்தை அடைகிறான். இம் மாறுபாடுகள் எல்லாம் உடலுக்கே ஏற்படுகின்றன. இதற்காக ஒருவனும வருந்துவதாகத் தெரியவில்லை. அப்படியே ஆத்மாவானவன் இந்த உடலைவிட்டு வேறு உடல் எடுத்துக் கொள்வதற்கும் வருந்தக்கூடாது. ஒரு உடலில் ஆத்மாவுக்கு எப்படி குழந்தைப்பருவ நிலைபோய் வாலிபம் வருகிறதோ, அப்படியே அந்த உடலும் போய் வேறு உடலை அடையவேண்டிய நிலையும் அடைகிறது. இதை நன்றாக உணர்ந்த அறிவாளிகள் இது விஷயத்தில் வருந்த மாட்டார்கள்.

---

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.

# கண்ணன் கதைகள்

## தீபம் நா. பார்த்தசாரதி

## 3. கம்சனின் கொடுமை

புக்ககத்தில் தேவகியின் வாழ்க்கை அமைதியாகக் கழிந்தது. தன் தமையனான கம்சனைப்பற்றிய பயங்கர நினைவுகளை அவள் மறக்கத் தொடங்கியிருந்தாள். அன்பு நிறைந்த கணவன், இன்பம் மிகுந்த சூழ்நிலை, நட்புரிமை பாராட்டும் தோழிப் பெண்கள், எல்லாருக்கும் இடையில் மணவாழ்க்கையின் புதுமை இன்பத்தை அனுபவிக்கும் உவகை தேவகிக்குக் குறைவின்றிக் கிடைத்தது. மனை வாழ்வின் மாட்சிமையை மங்கலம் என்பார்கள். நல்ல மக்கட் பேற்றை அதன் நன்கலம் என்பார்கள்.

உரிய காலத்தில் தேவகி ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். குழந்தையைப் பெற்ற மகிழ்ச்சியைவிடத் தமையனின் பழைய சபதத்தை நினைத்துப் பார்க்கும் துயரமே அவளிடம் அதிகமாக இருந்தது. பயந்த சுபாவமுடைய வசுதேவன் எட்டாவது குழந்தையால்தான் கம்சனுக்குத் துன்பம், என்று தெரிந்திருந்தும் முதல் குழந்தையையே அவனிடம் தூக்கிக் கொண்டு போய் விட்டான். கம்சன் அவன் குழந்தையோடு வந்ததைக் கண்டதும் இடியிடியென்று சிரித்தான். ''வசுதேவா! கவலைப்படாதே. உன்னுடைய முதல் ஏழு குழந்தைகளை நீ இங்கே கொண்டு வரவே வேண்டாம். எட்டாவது குழந்தைதான் என் உயிருக்குச் சத்துரு. அதை மட்டும்தான் நான் கொன்றுவிடக் கருதியிருக்கிறேன். ஆகவே இப்போது நீ இந்தக் குழந்தையோடு திரும்பிப் போகலாம். எட்டாவது குழந்தை பிறந்தவுடன் மட்டும் மறந்து விடாமல் அதை இங்கே கொண்டு வந்துவிட வேண்டும்''—என்று சொல்லி அனுப்பினான்.

"அப்பா! கம்சா, ஆண்டவனருளால் உன் மனத்தில் இவ்வளவு நல்வினையாவது தோன்றியதே!"—என்று தனக்குள் எண்ணி வியந்து கொண்டே வடமதுரைக்குத் திரும்பினான் வசுதேவன்.

காலவேகத்திற்கு ஒரு கணக்கு ஏது? ஆண்டுகள் ஒவ்வொன்றாகக் கழிந்து கொண்டேயிருந்தன. தேவகிக்கும், வசுதேவனுக்கும், ஆறு ஆண் குழந்தைகள். மக்களாக வாய்த்திருந்தனர். அதன் பின்புதான் அவர்களுடைய துன்ப நாட்கள் ஆரம்பமாயின. குழந்தை பிறக்கும் நாள் நெருங்க நெருங்கப் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி பெருகுவதுண்டு. இங்கோ அதற்கு நேர்மாறாக இருந்தது. குழந்தை பிறக்கப் போகிறதே என்ற பூரிப்பைவிட ஏன் பிறக்கிறது என்ற வருத்தமே அவர்களுக்கு அதிகமாக இருந்தது. முதலில் எட்டாவது குழந்தையை மட்டும் கொல்வதாகக் கூறியிருந்த கம்சன் பின்பு மனம் மாறித் தங்கைக்குப் பிறந்த குழந்தைகள் ஆறையுமே கொடுமையாகக் கல்லில் அறைந்து ஒவ்வொன்றாக கொன்றுவிட்டான்.

ஒரு நாள் கம்சனைச் சந்திப்பதற்கு மூவுலகங்களிலும் சுற்றிப் பழகுகின்றவராகிய நாரதமுனிவர் வந்து சேர்ந்தார். நாரத முனிவரைத் தெய்வீகக் கானத்தின் இருப்பிடம் என்று சொல்லுவார்கள். அவர் கானத்தின் இருப்பிடம் மட்டுமல்ல, கலகத்தின் இருப்பிடமும் ஆவார். ஆனால் அவர் கலகம் தீமையில் முடிவதில்லை. நன்மையில்தான் பெரும்பாலும் முடியும். கம்சன் நாரதரை ஆடம்பரமாக மரியாதை செய்து வரவேற்றான். இருவரும் பொழுது போக்காக உரையாடிக் கொண்டிருக்கும் போது நாரதர் கலகத்தின் காரணமான ஒரு செய்தியை அவிழ்த்தார். கலகமென்றால் கம்சனுக்கு உற்சாகமில்லாமல் இருக்குமா? நாரதரிடம் அதை உற்சாகமாகக் கேட்கத் தொடங்கிவிட்டான். "கம்சா! இப்போது உன்னிடம் சொல்லப் போகின்ற இந்தச் செய்தி-

பரம ரகசியமானது. நீ மட்டும் இதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இப்போது யதுகுலத்தில் தோன்றி யிருக்கக் கூடிய ஆயர்கள் ஆய்ச்சியர்கள், எல்லோரும் சாதாரணமானவர்களென்று நீ நினைத்துக் கொண்டிருக்காதே. அவர்கள் யாவரும் திருமாலின் கட்டளைக்கு இணங்கி ஒரு காரணம் பற்றி, யதுகுலத்தில் வந்து தோன்றியிருக்கிறார்கள். நீ முற்பிறவியில் அசுரனாக இருந்தவன். ஏதோ ஒரு நல்வினை யின் பயனாக இந்தப் பிறவியில் மக்கட்குலத்தில் அரசமரபில் வந்து தோன்றியிருக்கிறாய். வைகுந்தவாசியான திருமால் நீயவர்களை அறிப்பதற்காகவும், நல்லவர்களைப் பாதுகாப்பதற் காகவும், பூவுலகில் தேவகியின் எட்டாவது குழந்தையாக வந்து சருத்தரிக்கப் போகின்றார். முன் பிறவியில அசுரனாக இருந்து தழுப்பேறிப்போன உன் ஆத்ம குணங்களுக்கு ஏற்ப இப்பிறவி யிலும் உலகத்துக்குப் பல கொடுமைகளை நீ செய்வாய். அந்தக் கொடுமைகளை வளரவிடாமல் தடுத்து நன்மையையும், சத்தியத்தையும், பாதுகாப்பதற்கென்றே பிறந்திருக்கும் தேவர்களும், பிறக்கப் போகும் திருமாலும் உன்னை எதிர்த்துப் போராடி அழிக்கப் போகிறார்கள். நீயும் உன்னைச் சேர்ந்த வர்களும் அசுரர்களாகையினால் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" — என்று கூறிக் கலகத்திற்கு அடிப் படைக்கல் நாட்டிவிட்டுப் போய்ச் சேர்ந்தார் நாரத முனிவர்.

ஏற்கெனவே தேவகியையும், வசுதேவனையும் தேரிலேற்றிக் கொண்டு செல்லும்போது நிகழ்ந்த அசரீரி ஒலியைக் கேட்டுக் கலவரம் அடைந்திருந்த கம்சன் நாரதர் வந்து கூறிய புதுச் செய்தியைக் கேள்வியுற்றதும் இன்னும் அதிகமாகக் கலவரம் அடைந்தான் அவனுடைய மனத்தில் இனம் புரியாத பயமும் நடுக்கமும் உண்டாயின. "தேவகியும், வசுதேவனும் என் வாழ்வுக்கு எமனை அல்லவா பெற்றெடுக்கப் போகிறார் கள்? ஆகா! நான் வாளா இருப்பது எவ்வளவு பெரிய பேதைமை? உடனடியாக இதைக் கவனிக்கவேண்டும். தேவகியும், வசுதேவனும் நம் எல்லையிலிருந்து விலகித் தங்கள்

நாட்டில் சுதந்திரமாக வாழ விடுகிறோம்! இதுவே தவறு. அவர்களைத் தந்திரமாக இங்கே அழை-துக் கொண்டு வந்து சிறையில் அடைத்துவிட்டால் என்ன?'' — என்று தனக்குள் திட்டமிட்டான் கம்சன்.

கொடியவன் மனத்தில் கொடுமை அரசுவிற்று ஆளத் தொடங்கிவிட்டது. தீய எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குமுன்பு ஏற்படுமே ஒரு முனைப்பு, அது உண்டாகி விட்டது. உக்கிரசேன மன்னனையும் அடக்கி ஒடுக்கிப் போஜ நாட்டைத் தன் ஆணையின் கீழ் ஆளத் தொடங்கி விட்டான் கம்சன். ஒருமுறை கணவனோடு பிறந்த வீட்டிற்கு வந்து போகுமாறு கம்சன் தேவகிக்குச் சொல்லியனுப்பினான்.

பேதைப் பெண் தேவகி கம்சனுடைய சூழ்ச்சிகளை என்ன கண்டாள்? பாவம்! 'தமையன் இவ்வளவு நாட்களுக்குப் பின்பு மனம் மாறி அழைக்கின்றானே; பிறந்த வீட்டுக்குப் போய் வருவோம்'—என்று போஜ நாட்டுக்குப் புறப்பட்டு வந்தாள். அவளோடு வசுதேவனும் வந்தான்.

ஆனால் கம்சன் அவர்களுக்கு அரண்மனை வாயிற்கதவைத் திறந்து வைத்திருப்பதற்குப் பதிலாகச் சிறைச்சாலையின் வாயிற் கதவைத் திறந்து வைத்திருந்தான். ''அண்ணா! அன்போடு அழைத்து வந்து எங்களை இப்படி ஏமாற்றிச் சிறைச்சாலையில் அடைக்கிறாயே, இந்த அநியாயம் உனக்கு அடுக்குமா?''—என்று கதறினாள் தங்கை தேவகி.

''நீங்கள் இருக்கவேண்டிய இடம் இதுதான். என்னை அழிப்பதற்கு அல்லது நான் அழிவதற்குக் காரணமான சக்தியை உண்டாக்கிக் கொடுப்பவர்கள் யாரோ அவர்களுக்கு நான் இப்படித்தான் 'மரியாதை' செய்வது வழக்கம்.''—என்று திமிராகப் பதில் கூறினான் கம்சன். தேவகியும்; வசுதேவனும் போஜ நாட்டிற்கு வந்து சிறைவாசத்தை அடைந்தனர்.

கம்சனின் கொடுமைகள் தொடங்கின. வெளியே விதி யிடம் முறையிடும் அபயக்குரல்கள் ஆயிரமாயிரமாக எழுந்தன. ஒவ்வொரு நாட்டு மக்களையும், ஒவ்வொரு நாட்டையும் தனக்கடங்கிய ஒவ்வொரு சிற்றரசனையும் தன் ஆட்சியில் அதிகமாகக் கொடுமைப்படுத்தலானான் கம்சன்.

(தொடரும்)

# ஸ்ரீவைஷ்ணவம்

## Dr.V.V. ராமாநுஜம்

சங்கரரின் அத்வைத மதம், ராமாநுஜர் பெயரால் வழங்கும் விசிஷ்டாத்வைத மதம் இரண்டும் வேதத்தை அடிப்படை ப்ரமாணமாகக் கொண்ட வைதிகமதங்கள். இவற்றுள் அத்வைதம் குதிருஷ்டி என்னத்தக்கது. ஒருமையையே வலியுறுத்தும் வேதவாக்யங்களை (சுருதிகளை) மட்டுமே அத்வைதிகள் ஆதரிப்பர், தமது மதத்துக்கு அநுகூலமாகையாலே. ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத் – ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம–ஆதியில் (ஸ்ருஷ்டிக்கு முன்பு) இது (ஜகத்) கேவலம் ஸத் ஆக இருந்தது. ப்ரஹ்மம் ஒன்றே இரண்டாவதில்லாமல் (இருந்தது). ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம, நேஹ நாநாஸ்தி கிஞ்சந, ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம போன்றவை இவர்களுக்கு அநுகூலமான சுருதிகள். இவை (ஜகத்தில் காண்பவை) எல்லாம் ப்ரஹ்மமே; பல என்பதே கிடையாது; ப்ரஹ்மம் கேவலம் ஞானஸ்வரூபம் (ஞானம் என்ற குணம் இல்லை) என்பவை இவை. ச்வேதகேது என்பானுக்கு ப்ரஹ்மஞானத்தைப் புகட்டும் அவன் குரு தத்த்வமஸி ச்வேதகேதோ! என்கிறார். ஒரு மண்பிண்டத்தை (உருண்டையை) அறிந்தால் மண்ணுலான சட்டி, பானை முதலிய எல்லாவற்றையும் அறியலாம் போல ப்ரஹ்மத்தை அறிந்தால் நாம் காணும் எல்லாவஸ்துக்களையும் அறிந்ததாகும். காரணத்தை அறிந்தால் அதனால் உண்டாகும் காரியப் பொருள்களை அறிந்ததாகுமன்றோ? (மண்–காரணப்; சட்டி பானை–காரியம்) ஏ ச்வேதகேதுவே! அந்த ப்ரஹ்மம் நீயாக இருக்கிறாய் என்று உபதேசிக்கிறார் குரு. ஜீவப்ரஹ்ம ஐக்யமே வைதிகக் கருத்து

என்பர்கள் அத்வைதிகள். ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம். மற்ற யாவையும் பொய்.

ஜீவ பரபேதத்தை வலியுறுத்தும் ச்ருதிகள் பல உள்ளன. ப்ரஹ்மத்துக்கு விக்ரஹமும் குணங்களும் உண்டு என்று சொல்லும் ச்ருதிகளும் பல உள. ப்ருதகாத்மிநம் ப்ரேரிதாரம் ச மத்வா - ஆத்மா (ஜீவாத்மா) அதை நியமிக்கும் பரமாத்மா விலின்றும் வேறுபட்டது: த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே! தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அநச்நந்நயோபிசாகசீதி ! - ஒரே மரத்தில் (சரீரத்தில்) பிரியா நட்புள்ள இரண்டு பக்ஷிகள் (ஜீவனும் பரமனும்) நெருங்கி வாழ்கின்றன. அவற்றுள் ஒன்று (ஜீவன்) அம்மரத்தில் உண்டாகும் பழங்களை (கர்மபலம்) உண்கின்றது. மற்றது உண்ணாமல் ப்ரகாசித்துக் கொண்டுள்ளது; நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோவிததாதி காமான் எக்காலத்திலும் உள்ள (நித்யமான)வைகளில் முதல்வராயும், அறிவுள்ளவர்களில் (சேதனர்) முதல்வராயும், பலரில் முக்ய முதல்வராய் அவர்களின் காமங்களைப் பூர்த்தி செய்பவராயும் பரமபுருஷன் உளன்- இவை சில உதாரணங்கள்.

ய: ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித் தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாமரூப மந்நம் ச ஜாயதே -எல்லாவற்றையும் எல்லா விதங்களிலுமாக அறியும் அந்த ப்ரஹ்மத்திலிடமிருந்து பெயர், ருபம் இவையுள்ள சேதன, அசேதனப் பொருள்கள் உண்டாயின; பரா அஸ்யசக்தி ! விவிதைவச்ரூயதே ஸ்வாபாவிகீ ஞானபலக் ரியாச -பரமபுருஷனுடைய சக்தி (நினைத்துப் பார்க்கமுடியாத அளவில்) உயர்ந்ததாகவும் இயல்பானதாகவும் பலவிதங்களில் காட்டப்படுவதாகவும் உள்ளன. அப்படியே அவனுடைய ஞானம், பலம், செய்கைகள் யாவையும் மிகவுயர்ந்தவை; அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு! விசோகோ விஜிதத்ஸோபி பாஸ! ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: -பசி, பிணி, மூப்பு, துன்பம்,

இறப்பு, கர்மபலானுபவம் என்பன போன்ற குறைமேதுமில்லாத பரமபுருஷன் கல்யாண குணங்களையுடையவன் என்று ச்ருதி பரப்ரஹ்மத்தின் குணயோகத்தைச் சொல்லிற்று. மேலும், ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே-தஸ்ய யதாகப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ-தஸ்ய உதிதிநாம -ஸூர்யமண்டல மத்யத்தில் உள்ள இந்த பரமபுருஷன் உருக்கி வார்த்த பொன்னே போல (ஸௌந்தர்யமுள்ள) திருமேனி படைத்தவன். ஸூரியனால் அப்போதலர்த்தப்பட்ட செந்தாமரையையொத்த கண்களையுடையவன். உத் என்ற பெயரையுடையவன் என்றும் ச்ருதி ஓதுகிறது.

பேதச்ருதிகள் அத்வைதிக்குத் தலைவேதனை அளிப்பவை ஆதலால் அவற்றை அவன் புறக்கணிக்க வேண்டியுள்ளது. பிரமாணங்களில் அபேதச்ருதிக்குப் போல் முக்கியமான இடம் இவற்றுக்குத் தருவதில்லை. இந்த ச்ருதிகள் இருப்பதாகவே அவர்கள் கண்டு கொள்வதில்லை. பேதமே முடிவான ஸித்தாந்தமாகக் கொண்ட த்வைதிகளுக்கு (மத்வமதத்தினர்) அபேதச்ருதிகள் எட்டிக்காயாக உள்ளன. அவர்கள் அவைகளைப் புறக்கணிக்கின்றனர்.

இப்படி அடிப்படை வேறுபாடுள்ள ச்ருதிவாக்யங்களை ஸமந்வயப் படுத்துவது (ஒருங்க விடுவது) எப்படி? ஒருங்கவிடத்தான் இயலுமோ? எனில் ப்ரத்யக்ஷமாக ஒருங்க விட்டுக் காட்டுவது நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம். பேதச்ருதிகள், அபேதச்ருதிகள் தவிற மூன்றுவது வகுப்பிலுள்ள சில வேதவாக்கியங்கள் உள்ளன. இவைகளை கடகச்ருதிகள் (ஒருங்க விடும் வாக்கியங்கள்) என்பர். ஜகத்திலுள்ள எந்த ஒரு பொருளும், ஒரு வடிவமும் பெயரும் அடைவது, அதனுள் ஒரு ஜீவன் இருப்பதால்தான்; அந்த ஜீவனுக்குள்ளும் உயிராயிருந்து நடத்துமவன் பரமபுருஷன். அநேந ஜீவேந ஆத்மநாநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி என்று சாந்தோக்ய உப

நிஷத். இந்த ஜீவனைச் சரீரமாகக் கொண்டு எல்லாவற்றிலும் ப்ரவேசித்து பெயர்-வடிவங்களை உண்டாக்கக் கடவேன்-என்றபடி. ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் ய: ப்ருதிவ்யா அந்தரோ யம் ப்ருதிவீ நவேத யஸ்யப்ருதிவீ சரீரம் ய: ப்ருதிவ்யாமந்தரோ யமயதி — ஏஷதே ஆத்மா அந்தர்யாம் யம்ருத: என்று ப்ருஹ தாரண்யகம். எவன் ப்ருதிவி (பூமி, மண்)யில் இருந்து அதனுள் பரந்து உளனோ, எவனை அந்த ப்ருதிவி அறியாதோ, எவனுக்கு அந்த ப்ருதிவி சரீரமாகுமோ, எவன் அதை நியமிக்கிறானோ அந்த இயல்பாய் நித்யமான (இறப்பற்ற-அம்ருத:) பரம புருஷனே உன்னிலும் உள்ளுறைந்துளன். ஏஷதே ஆத்மா அந்தர்யாம்யம்ருத: என்று இருபத்தி இரண்டு முறை இவ் வுபநிஷத் ஓதும். எல்லாப் பொருள்களிலும் இவன் உள் ளுறைந்து நடத்துமவன் என்பதை வலியுறுத்துகிறது. இதே மாதிரி ய ஆத்மநி திஷ்டந்-யஸ்ய ஆத்மா சரீரம் என்றும் வ்யக் தமாக ச்ருதி சொல்லுகிறது. ஏஷஸர்வ பூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: என்று ஸுபா லோபநிஷத். பரமபுருஷனும் குறையேதுமில்லாத வனுமான நாராயணன் எல்லாவற்றிலும் (சேதன அசேதனங் களில்) வ்யாபித்து அவற்றினுள் ஆத்மாவாய் அவற்றின் ஸத் தையை நிர்வஹித்து (அவற்றை உள்ளன வாய்ச் செய்து) நியமிப்பவனாய் (நடத்துமவனாய்) உள்ளவன் யாவையும் அவனுக்குச் சரீரமாய் உள்ளன. ஒரு வஸ்து உள்ளது என்றால் அதில் ஒரு ஆத்மா இருக்க வேண்டும். எல்லாப் பொருள் களிலும் அவைகளிலிந்து பிரியாமல் ஆத்மாவாய் இருந்து அவற்றை உள்ளனவாய்ச் செய்வது நாராயணன். யஸ்ய ஆத்மா சரீரம், யஸ்யப்ருதிவீ சரீரம் என்கையால் ஸகல சேதன அசேதனங்களும் அவனுக்குச் சரீரமாக உள்ளன. அவனின்றும் பிரிக்கமுடியாத தத்துவங்களாய் அமைந் துள்ளன.

இந்த கடகச்ருதிகளும் ப்ரமாணவாக்யங்களே. ச்வேத கேதோ! தத் த்வம் அஸி என்னும் போது ச்வேதகேது என்

பான் ஒரு சரீரமும் ஒரு ஜீவனும் சேர்ந்த சேர்க்கை. இவற்றுள் பரமபுருஷன் அந்தர்யாமியாய் உள்ளமையால் ச்வேதகேதுவின் சரீரத்தையும் அதிலுறை ஜீவனையும் ஒன்ருகச் சொல்லுவது போல் இந்த சேர்க்கையில் உறையும் பரமபுருஷனையும் இதையும் (ச்வேதகேது) ஒன்ருகச் சொல்லலாமன்ரே? ச்வேதகேதுவே -நீ அந்த ப்ரஹ்மத்துக்கு சரீரமாயிருந்து நீயே அது என்னலாமாய் உள்ளாய் என்றபடி. ச்வேதகேது என்ற சரீரம், அதினுள் ஒரு ஜீவன், அந்த ஜீவனுள் உள்ள பரமாத்மா இவையாவையும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் உள்ளவை. வெவ்வேருயினும் ஒன்ருகவே உள்ளவை. இதனல் தேறும் அத்வைதம் விசிஷ்டாத்வைதமாகும். ஆக பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்தில் பேதச்ருதியோ, அபேதச்ருதியோ, கடகச்ருதியோ எல்லாமே உயிருள்ளவைகளாய்த் திகழ்கின்றனவாகையால் இது ஒன்றே உண்மையான வைதிகமதம்.

---

Anything & Everything In
Real Estates
(Buying & Selling Properties)
Civil Constructions
Please Contact

MINERVA ENTERPRISES
2, Narayanan Street,
Mahalingapuram,
Nungambakkam, MADRAS-600 034.

COVER STORY

# திருவெஃகா

**கண்ணன் :** பார்த்தா நாம் இப்போது காஞ்சியில் அமைந்துள்ள திவ்யதேசங்களில் கடைசியாக திருவெஃகாவை ஸேவிக்கப் போகிறோம்.

**பார்த்தன் :** அது எங்குள்ளது கண்ணா?

**கண்ணன் :** காஞ்சி வரதராஜப் பெருமாள் ஸன்னிதி யிலிருந்து மேற்கே சுமார் 1 கி. மீ. தொலைவில் அஷ்டபுஜப் பெருமாள் ஸன்னதிக்கு எதிரில் அமைந்துள்ளது. இந்த விளக்கொளியிலிருந்து நாம் நடந்தேகூடச் சென்று விடலாம்.

**பார்த்தன் :** போகும் வழியில் அத்தலத்தின் பெருமை களைக் கூறுவாயா?

**T.A.ராஜம்**

**கண்ணன் :** இத்தலமும் ஆழ்வார்களால் பாடப்பெற்று திவ்யதேசமாகவும், பொய்கை ஆழ்வாருடைய அவதார ஸ்தலமாகவும் உள்ளது. பழம்பெரும் சங்க இலக்கியங்களில் கூட இத்தலத்தைப் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. மணவாளமாமுனிகள் இந்த திவ்ய தேசத்தில் ஒருவருட காலம் எழுந்தருளியிருந்து ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்திருக் கிறார். மேலும் நம்மாழ்வார் தமது முதல் பிரபந்தமான திருவிருத்தத்தில் கோயில் (ஸ்ரீரங்கம்), திருமலை, திருவெஃகா ஆகிய மூன்று திவ்யதேசங்களை மட்டுமே பாடியிருப்பதால் பெருமாள் கோயில் என்பது இத்தலத்தையே குறிக்கும் என்றும் சிலர் கூறுவதுண்டு.

**பார்த்தன் :** இதோ தெரியும் இந்தச் சிறிய கோயிலுக்கு இவ்வளவு பெருமைகளா?

---

மேலட்டையில் : யதோக்தகாரி.

கண்ணன் : ஆம் கோயிலுக்குள் செல்வதற்குமுன் கோயிலுக்கு வலதுபுறமுள்ள "பொய்கைக் குளம்" எனும் புஷ்கரிணிக்குச் செல்வோம் வா. இந்தப் பெற்றாமரைப் பொய்கையில் பூத்ததொரு நற்றாமரைப் பூவிலே ஐப்பசித் திருவோண நன்னாளில் பொய்கையாழ்வார் அவதரித்தருளினார். இனிநாம் கோயிலுக்குள் செல்லலாம்.

பார்த்தன் : இந்த கோயிலுக்குள் உள்ள ஸன்னதிகள் எவை எவை?

கண்ணன் : மேற்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயிலில் நுழைந்ததும் இடதுபுறம் தென்படுவது பொய்கையாழ்வார் ஸன்னிதி. தற்போது மூலவர் மட்டுமே அங்கு எழுந்தருளியிருக்கிறார். உத்ஸவரும், மற்றையாழ்வார் ஆசாரியர்களும் பாதுகாப்புக் காரணமாக பிரதான ஸன்னதிக்குள்ளேயே எழுந்தருளியிருக்கின்றனர். பிரதட்சிணமாய் வந்தால் இடதுபுறம் தாயார் ஸன்னிதியையும் பிறகு சக்ரவர்த்தி திருமகன் ஸன்னிதியையும் ஸேவிக்கலாம். இனி நாம் திருமஞ்சன மண்டபத்தைத்தாண்டி கர்ப்பக்ருஹத்திற்குச் செல்வோம வா. ஆதிசேஷன் மீது நான்கு திருக்கரங்களோடு அத்யாச்சர்யமான பெரிய திருமேனியோடு சயனித்திருக்கும் பெருமானை ஸேவி.

பார்த்தன் : என்ன கண்ணா, சயனத்திருக்கோலம் எல்லா திவ்யதேசங்களிலும் இடமிருந்து வலமாக வன்றோ இருக்கும். இவ்வெம்பெருமான் வலமிருந்து இடமாகவன்றோ சயனித்திருக்கிறான். இதற்கு விசேஷமாக ஏதேனும் காரணமுண்டா?

கண்ணன் : நன்று கேட்டாய். திருமாலைக் காண வேண்டி நான்முகன் யாகம் செய்யத் தொடங்கியபோது தன்னைக் கூப்பிடாமல் அவமதித்து விட்டதாகக் கருதிய சரஸ்வதி, கோபம் கொண்டு யாகத்தைக் கலைக்க, வேகவதி

எனும் ஆருக வெள்ளத்துடனும் வேகத்துடனும் யாகம் நடந்த இடத்திற்குவந்தாள். யாவரும் எம்பெருமானைச் சரணம் புக, எம்பெருமான் சடக்கென நிர்வாணமாய் வேகவதி வரும் மார்க்கத்தில் குறுக்கே சயனித்துவிட, அவள் வெட்க முற்றுத் திரும்பிவிட யாகம் இனிதே முடிந்தது. அப்படி அவசரத்தில் சயனித்தபடியால் வலமிருந்து இடமாக மாறிச் சயனித்துள்ளான் என்பர் பெரியோர். வேகவதிக்கு எம்பெருமான் அணையாக வந்தவிடமாதலால் வேகவணை — வேகணை — வெஃகணை—வெஃகா—என்று பலவாருக மருவி விட்டது.

**பார்த்தன் :** எம்பெருமான் திருநாமம் என்ன வென்று கூறவில்லையே. அதற்கும் காரணம் ஏதேனுமிருக்குமாகுல் அதையும் சேர்த்துக்கூறு, கண்ணு!

**கண்ணன் :** திருமழிசை யாழ்வார் சிலகாலம் இத்தலத்திலே வாழ்ந்திருந்தார். அவருக்கு அத்தியந்த சிஷ்யனுக கணி கண்ணன் எனும் கவியிருந்தார். இவருடைய கவித்திறனைக் கேள்விப்பட்ட அவ்வூர் அரசன் தன்னைக்குறித்து ஒரு பாட்டுப் பாடுமாறு கேட்டான். கணிகண்ணனே 'எம்பெருமானைப் பாடும் நாக் கொண்டு மானிடரைப் பாடேன்' என்று கூறி விட, கோபம் கொண்ட அரசன் அவரை நாடு கடத்தி விட்டான். உடனே திருமழிசைப்பிரான் இவ்வெம்பெருமானிடம் வந்து.

**கணிகண்ணன் போகின்ருன் காமருபூங்கச்சி**
**மணிவண்ணு! நீகிடக்க வேண்டா—துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்**

என்று பிரார்த்திக்க எம்பெருமான் ஆழ்வாரோடும் கணி கண்ணனோடும் ஊரைவிட்டு வெளியேறி விட்டான். எம்பெருமானே போய் விட்டபடியால் காஞ்சிமாநகரமே ஊழிக்

காலந்துப் பேரிருளில் மூழ்கிட, தவற்றை உணர்ந்த அரசன் கணிகண்ணனையே சரணமடைந்து மீண்டும் நாட்டிற்கு வருமாறு அழைத்தான். உடனே திருமழிசை ஆழ்வார் எம்பெருமானை நோக்கி

**கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் – துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன், நீயுமுன்றன்**
**பைந்நாகப்பாய் விரித்துக்கொள்**

என்று பிரார்த்திக்க மீண்டும் இத்தலத்திற்கே எழுந்தருளிச் சயனித்தான். இப்படி ஆழ்வார் சொன்னபடியெல்லாம் செய்தபடியால் அழகுதமிழில் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்றும் வடமொழியில் யதோக்தகாரி என்றும் திருநாமம் ஏற்பட்டது. இந்த எம்பெருமான் அவ்வாறு கணிகண்ணனோடும் ஆழ்வாரோடும் சென்று தங்கிய இடம் வேகவதியாற்றங்கரையில் உள்ளது. அது ஓர்-இரவு-இருக்கை என்று வழங்கப்பட்டு தற்போது ஓரிக்கை என மருவி விட்டது. இந்நிகழ்ச்சி பிரதிவருஷம் தைமாதம் மகநட்சத்திரத்தன்று ஒரு உத்ஸவமாகவும் அநுஷ்டிக்கப்படுகிறது.

**பார்த்தன்:** ஆஹா! என்ன ஆச்சரியமான நிகழ்ச்சி! பக்தன் இட்ட கட்டளையை அப்படியே நிறைவேற்றும் எம்பெருமான் இவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும். நினைத்தாலே மெய்சிலிர்க்கிறது.

**கண்ணன்:** மூலவருடைய திருவடியருகில் சரஸ்வதி வீற்றிருக்கிறாள். திருமுன்பே உத்ஸவர் தேஜோ மயமான திருமேனியுடன் ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள் ஸமேதராய் எழுந்தருளியிருக்கிறார். முகப்பே உள்ள மண்டபத்தில இத்தலத்தில் சிலகாலம் வாழ்ந்தவர்களான பொய்கை ஆழ்வார், திருமழிசை ஆழ்வார், மணவாள மாமுனிகள் (உத்ஸவர்கள்)

மூவரும் சேர்ந்து எழுந்தருளியிருக்கிறார்கள். இங்கு ஒருவருட காலம் காலக்ஷேபம் செய்தபடியால் இந்த ஒரு திவ்ய தேசத்தில் மட்டும் மணவாள மாமுனிகள் ஞான முத்திரையோடு எழுந்தருளியிருக்கிறார்.

**பார்த்தன் :** இங்கு நடைபெறும் உத்ஸவங்கள் யாவை?

**கண்ணன் :** பிரதிமாஸம் பொய்கை ஆழ்வார் திருநக்ஷத்திரம், உத்ஸவம், சாற்றுமறை, தையில் மகத்தன்று ஒரிர விருக்கை உத்ஸவம், மணவாளமாமுனிகள், பிள்ளைலோகாசார்யர் சாற்றுமுறைகள், திருவத்யயன உத்ஸவம் முதலியன சிறப்பாக நடைபெறுகின்றன. பாஞ்சராத்ர ஆகமப்படி திருவாராதனம் நடைபெறும் இக்கோயிலை "நல்லப்பா" திருவம்சத்தவர்கள் தர்மகர்த்தாக்களாய் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

**பார்த்தன் :** ஆகா, உன்னுடைய உதவியால் தொண்டைநாட்டிலுள்ள 22 திவ்யதேசங்களையும் ஸேவிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. மிக்க நன்றி கண்ணா. இனி நாம் சென்னைக்கு திரும்புவோமா?

Occeanlink
Shipchandlers-shipservice engineers & Exporters
254 THAMBU CHETTY ST.
MADRAS-1
Phone : 31341

# நினைத்தது நடந்தது

கிருதயுகம். ஒருநாள் பரமபதநாதன் விச்ராந்தியாக சயனித்துக் கொண்டிருக்கிறார். அடுத்துச் செய்ய வேண்டிய காரியங்களுக்காக, முன்பே எடுத்துக் கொள்ளும் ஓய்வு அது. பச்சைமாமலை போன்ற திருமேனியனா அமைதி கொள்பவன்? அப்படியொரு பாவனை! பிரகிருதிகளைப் பார்த்துக்கொண்டும், அண்டசராசரங்களின் இயக்கங்களைக் கவனித்துக் கொண்டும், ஈ, எறும்பு எண்ணாதி ஜாதிகளின் சுக துக்கங்களையும் கவனித்தபடி, அதனால் செவ்வரியோடிய செங்கண் உடையவன் சயனித்துக் கொண்டிருந்தான்.

---

## V. பிரேமாவரதன்

---

அழகிய வாயில் அமுத ஊரல் எடுத்தவன் தன் கொவ்வைக்கனி இதழைப்பிரித்துப் புன்னகைத்துச் சுழித்துக் கொண்டான். அவனுள்ளே ஒரு சிரிப்பு! அச்சிரிப்பிற்கு என்ன உள்ளர்த்தமோ? அடுத்த அவதாரத்திற்குச் செய்து கொள்ளும் சங்கல்பச் சின்னமோ அது? அரைச்சிவந்த ஆடையோனின் சிந்தை மயக்கும் சிரிப்பு அது.

அமரர்கள் ஏறான் நீண்ட அப்பெரியவாய கண்களைச் சற்றே மூடினான். அந்த அழகு எப்படியிருந்தது? அது வாசாமகோசரம்! அப்படிப்பட்டவன், தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன் அமைதியாகக் கண்ணயர்ந்து இருக்கும்போது செவிகளைமட்டும் கூர்மையாக்கியபடி பாம்பணையில் பள்ளிகொண்டிருந்தான். பகவானின் ஆபரணங்களும் கிரீடமும் ஓய்வு எடுத்துக்கொண்ட தருணந்தான் அது. முக்கியமான ஒரு சில ஆபரணங்கள் மட்டும் விழித்திருந்து வம்பு பேச முனைந்தது. செங்கணானின்

திருவடிகளைப் பற்றிப் பரிணமித்திருந்த "பாதுகை" சற்று ஒதுக்கமாய் பகவானின் உத்தரவிற்குக் காத்திருந்தது. இதைப்பார்த்த மற்ற ஆபரணங்கள் கேலியாகச் சிரித்தன வாம். பரமபத நாதனின் அருகாமையிலேயே ஒரு கேலியா? எளிய புன்னகையுடன் பரமன் கவனிக்கத் தலைப்பட்டான். திருமுடியில் வீற்றிருந்த கிரீடம் கூறியது. "அந்தப் பாதுகை யைப்பாருங்களேன்,பாவமாக இருக்கிறது."

உடனே, சங்கமும், ஆழியும், "ஆமாம், ஆமாம் பகவானின் காலடியில் தேய்ந்து மிக மெலிந்து சிறியதாக இருக்கிறது. அது தெரியாமல் தன்னை என்னவோ மகா பாக்கிய சாலியாக எண்ணிக் கொண்டு, மதிப்பில் உயர்ந்தாக நினைத்து, மதர்ப்பாக இருக்கிறது. பார்த்தீர்களா?" என்று பரிகாசம் செய்தது.

"இப்படியொரு கீழான நிலையில் இருக்கும் போதே இதற்கு இப்படியொரு தலைக்கனமா?" என்று கிரீடம் ஏளனம் செய்தது. பாதுகை பவ்யமாகக் கேட்டுத் துன்பப்பட்டுச் சிரித்தது. என்ன இருந்தாலும் அது பகவானுக்குத் தொண்டு செய்யும் தொண்டனல்லவா? ஒருகாலில் சங்கு ஒருகாலில் சக்கரம் உள்ளடி பொறித்தமைந்த இருகாலும் கொண்டு அங் கங்கு எழுதினாற்போல் இலச்சினை படநடந்து செல்லும் கடல் வண்ணனைத் தாங்குகின்றவனாயிற்றே! எனவே, பதறாமல் பொறுத்திருந்தான்! உண்மையான பக்தனுக்குரிய தெய்வீக பக்தியிலே எம்பெருமானை எண்ணி உருகிநின்றான்! பகவான் கடாக்ஷம் திரும்பியது. 'ஆகா! உங்களுக்கு இவ்வளவு கர்வமா?' எம்பிரான் தன் இதழோரம் ஒரு சிரிப்பை நெளிய விட்டான். அவன் மனத்தில் ஒரு தீர்மானம்! உடனே கண் விழித்தான்! சங்கும் சக்கரமும் அமைதியாகியது. கிரீடம் தன்னைச் சமாளித்துக் கொண்டது. பங்கயநீள் நயனத்

தஞ்சன மேனியான், "எந்தப் பாதுகையை நீங்கள் பரிகசித்தீர்களோ, அந்தப் பாதுகைக்குச் சிம்மாசனம் அமரும் யோகமும், சங்கமும் சக்கரமும், சாமரம் வீசி அருகில் நின்று பணிவிடை செய்யவும், தாங்க முடியாத கர்வத்தில் திளைத்த கிரீடம் பதினான்காண்டுகள் சிறை வாசம் செய்யவும் வேண்டும்" என்று சத்ய சங்கல்பம் மனத்திற்குள் செய்து கொண்டான்! இது அவன் திருவுள்ளத்திற்கு அன்றி வேறு வெளியில் எப்படித் தெரியும்?

கால ஓட்டத்தில் திரேதாயுகம் பிறந்து நடந்து கொண்டிருந்தது. இறைவன் இராமாவதாரம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சக்ரவர்த்தித் திருமகனாகப் பிறந்து-இருதய மகிழ்வுடன் வனவாசம் செய்யும் காலத்தில்-கிரீடம் காராக்ஹ வாசம் செய்தது! பாதுகை சிம்மாசனத்தில் பட்டாபிஷேகம் செய்யப்பட்டு இருந்தாலும் எம்பெருமானைப் பிரிய நேர்ந்து விட்டதே என்ற வேதனையுடன் வீற்றிருந்தது! சங்கமும் சக்ரமும் பரத-சத்ருக்னர்களாகச் சாமரகைங்கரியம் செய்து கொண்டிருந்தனர்! அன்று அவன் திருவுள்ளத்தில் நினைத்தது, இன்று நடந்தது!



சிறுவர் பகுதி

# பிள்ளை லோகாசாரியர்

கீதை மாமா : குழந்தைகளே! இந்த ஐப்பசி மாதத்திற்கு பல தனிச் சிறப்புக்கள் உண்டு. வேறு எந்த மாதத்திற்கும் இல்லாத அந்தத் தனிச் சிறப்புக்கள் எவை என்று கூற முடியுமா?

பராங்குன்; இந்த மாதத்தில் தானே தீபாவளி வருகிறது. நரகாசுரன் என்ற அரக்கனைக் கண்ணன் கொன்ற மாதம் ஐப்பசிதானே மாமா! ஆனால் இதைத்தவிர வேறு என்ன சிறப்புக்கள் இருக்கின்றன இம்மாதத்திற்கு?

கீதை மாமா : நரகாசுரனைக் கொன்று இவ்வுலகைக் கண்ணன் துன்பத்திலிருந்து மீட்டது போலே அறிவில்லாமை என்ற அரக்கனைக் கொன்று இவ்வுலகத்தவர்களைக் காத்தவர்கள் ஆழ்வார்களும் ஆசாரியர்களும். அவர்களுள் முதல் ஆழ்வார்களான பொய்கை ஆழ்வார். பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் அவதரிக்கும் பேறு பெற்றது இம்மாதம் தான். அதுமட்டுமல்ல, நம் ஸம்ப்ரதாயத்திற்கே தூண்களான பிள்ளை லோகாசார்யரும் மணவாள மாமுனிகளும் அவதரித்த சிறப்பும் இந்த மாதத்திற்கே உள்ளது. இப்போது நான் உங்களுக்குப் பிள்ளை லோகாசாரியர் வரலாற்றைக் கூறப் போகிறேன்.

ஆண்டாள் : மாமா, ஸ்ரீரங்கநாதரைக் காப்பாற்றத் தன்னுயிரைத் தியாகம் செய்த மகான் என்று ஸ்ரீ வேணு கோபாலன் அவர்கள் எழுதி வரும் 'திருவரங்கன் உலா' கதையில் குறிப்பிடுகிறாரே அவர்தானே பிள்ளை லோகாசாரியர்?

கீதை மாமா : ஏதேது, கீதாசார்யனில் வரும் எல்லா விஷயங்களையுமே படித்து விடுகிறாய் போலிருக்கிறதே! ஸ்ரீ ராமாநுஜருடைய சீடரான கூரத்தாழ்வானுடைய குமாரர் பட்டர். அவருடைய சீடர் நஞ்சீயர். அவருக்கு சீடர் நம் பிள்ளை. நம்பிள்ளையினுடைய சீடர் வடக்குத் திருவீதிப்பிள்ளை

பராங்குசன் : என்ன மாமா! பிள்ளைலோகாசாரியர் வரலாறு கூறுவதாகக் கூறிவிட்டு குருபரம்பரையையே கூறிக் கொண்டிருக்கிறீர்களே!

கீதை மாமா : இரு. அவசரப்படாதே. வடக்குத் திரு வீதிப்பிள்ளைக்குத் திருமணமாகியிருந்தாலும் இல்லற வாழ்க் கையில் ஈடுபடாமல் துறவிபோலவே வாழ்ந்து வந்தார். இதனால் வருத்தமடைந்த அவருடைய தாயார் நம்பிள்ளையிடம் போய் "உம்மைப் போலவே ஒரு மகன் எனக்கு பேரனாகப் பிறக்க வரமருளவேணும்" என்று பிரார்த்தித்தாள். அப்படியே அவருடைய அருளால் வடக்குத் திருவீதிப் பிள்ளைக்குக் குமாராய் பிள்ளைலோகாசாரியர் அவதரித்தார்.

பராசரன் : பிள்ளை லோகாசாரியர் என்பது பெற்றோர் இட்ட பெயர்தானா அல்லது வேறு ஏதாவது காரணமுண்டா?

கீதை மாமா : லோகத்துக்கெல்லாம் ஆசாரியராய் எழுந் தருளியிருந்தபடியால் நம்பிள்ளைக்கு லோகாசார்யர் என்ற திரு நாமம் ஏற்பட்டது. அவருடைய அருளாலே பிறந்த படியால் அவருடைய பெயரையே தமது குமாரனுக்கும் வைத்தார் வடக்குத் திருவீதிப் பிள்ளை. ஆனாலும் இருவருக்கும் வித்யாசம் தெரிவதற்காக இவர் பிள்ளை லோகாசார்யர் என்றழைக்கப் பட்டார். உரிய காலத்தில் தமது தந்தையிடமே ஸகல சாஸ் த்ரங்களையும் கற்று ஞானியாய் விளங்கினார். இவர் அஷ்டாதச ரஹஸ்யம் என்று புகழ் பெற்ற பதினெட்டு நூல்களை அருளிச் செய்திருக்கிறார். அவற்றுள்ளும் ஸ்ரீவசன பூஷணம், தத்வத்-

ரயம், முமுக்ஷுப்படி எனும் மூன்று நூல்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

**ஆண்டாள் :** இவர் திருவரங்கனுக்காக உயிர்த் தியாகம் செய்தது எப்படி மாமா?

**கீதை மாமா :** இவர் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வந்த காலத்தில் துலுக்கர்கள் படையெடுத்து வந்தனர். அவர்கள் மூர்க்கர்களாக இருந்தபடியால் கோயில்களை இடித்தும் விக்ரகங்களை உடைத்தும் நாசப்படுத்தினர். அப்போது பிள்ளை லோகாசாரியருக்கு அதிக வயதாகியிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தாமே முன்னின்று ஸ்ரீ ரங்கநாதனுடைய ஸன்னிதியை கல்திரையால் மூடி, உத்ஸவரையும் பரிவாரங்களுடன் காட்டு வழியாக எழுந்தருள்வித்துக் கொண்டு சென்றார். வழியில் கள்வர்கள் வழிமறிக்கவே அவர்களை அன்பொழுகப் பேசித் திருத்தி, அரங்கனை மேலும் வழிநடத்திச் சென்றார். ஆனால் ஜ்யோதிஷ்குடி என்ற கிராமத்தில் எழுந்தருளும்போது, பலகாத தூரம் நடந்ததால் தள்ளாமை அதிகமாகி அங்கேயே திருநாட்டுக் கெழுந்தருளினார்.

**ஆண்டாள் :** என்ன மாமா இது? இவ்வளவுதானா? சீக்கிரத்திலேயே முடித்து விட்டீர்களே?

**கீதை மாமா :** இந்த வரலாற்றை நீங்கள் 'திருவரங்கன் உலா' வில் விவரமாகப் படிக்கப் போகிறீர்கள். மேலும் இவ்வாசார்யருடைய வரலாற்றைப் பற்றி நம் முன்னோர்கள் அதிகமாக எழுதி வைக்கவில்லை. கடைசிவரை தூய பிரம்மசாரியாகவே வாழ்ந்த இவரது அளவிறந்த பெருமைகள் இவரது நூல்கள் மூலமே தெரிய வருகின்றன. ரஹஸ்யக்ரந்தங்களான அந்நூல்கள் குழந்தைகளான உங்களுக்குப் புரிவது கடினம். ஆயினும் விரைவிலேயே அந்நூல்களையும் படித்து அறிந்து கொள்ளும் பக்குவம் உங்களுக்கு ஏற்பட வேணுமென்று ஆசீர்வதிக்கிறேன். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போமா? ★

# பேராசிரியர் Dr. V. V. ராமாநுஜம்

பேராசிரியர் Dr V. V. ராமாநுஜம் அவர்களை ஸ்ரீதாசார்யன் வாசகர்களுக்கு நான் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவருடன் மிக நெருக்கமான தொடர்பு எனக்கு ஏற்பட்டது சுமார் பத்து ஆண்டுகளாகத்தான். இந்தப் பத்து ஆண்டுகளிலேயே எனக்கு அவர் Friend, Philosopher, Guide எல்லாமுமாக இருந்து வழிகாட்டித் திருத்திய நிகழ்ச்சிகள் அநந்தம். ஸ்ரீதாசார்யன் பத்ரிகையின் தோற்றத்திற்கு முதற்காரணமாக அமைந்தவர் ஸ்ரீ உ. வே. மகாவித்வான் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிதான் என்று முன்பொருமுறை எழுதியிருந்தேன். அவருக்கடுத்தபடியாக இப்பத்ரிகையின் தோற்றத்தில் பெரும் பங்கு கொண்டவர் பேராசிரியர் அவர்கள்தான்.

அச்சகத்துறையில் எனக்குத் தொடர்பை ஏற்படுத்தியவர் P. B. A. ஸ்வாமிதான். ஆனால் ஒரு புத்தகத்தை edit செய்து வெளியிடுவதற்கு அத்தொடர்பு மட்டும் போதாது. பேராசிரியர் Dr. ராமாநுஜம் அவர்களும் நானும் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபையின் சார்பில் ஸ்ரீராமாநுஜரின் 960வது திருநக்ஷத்ர பூர்த்தியை முன்னிட்டு ஸ்ரீராமாநுஜ விஜயம் என்ற ஒரு நினைவு மலர் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டோம். அப்போதுதான் அவர் பல நுணுக்கங்களை எனக்குப் புலப்படுத்தினர்.

இப்படிப் பல புத்தகங்களை ஏற்கனவே மிகச் சிறந்த முறையில் வெளியிட்டிருந்தவராதலால் ஒரு ஆசிரியர் மாணவனுக்குச் சொல்லித்தருவதுபோல் Editing செய்வதின் பற்பல நுணுக்கங்களையும் மிக எளிய முறையில் விளக்கினர். இப்படி. இருபது வயதிலேயே அறுபது வயது அனுபவத்தையும், அறிவையும் புகட்ட அறிஞர்கள் இருக்கும்போது, ஒரு பத்திரிகையை ஆரம்பித்தால் என்ன என்ற துணிவு ஏற்பட்டது.

சூரியனுடைய ஒளியால் பிரகாசிக்கும் சந்திரன் போல அவ்வறிஞர்களுடைய ஆலோசனைகளால்தான் திதாசார்யன்



பத்திரிகையினுடைய பிரகாசமும். Dr. V. V. R. ஆரம்பம் முதல் கட்டுரைகள் எழுதி வருவதோடல்லாமல் ஆலோசகர் குழுவிலும் அங்கம் வகித்துப் பெருமைப் படுத்தி வருகிறார்.

லௌகிகத்துறையில் மிகவும் உயர்ந்த பட்டங்கள் பெற்றவர் Dr. V. V. ராமாநுஜம். பற்பல அயல்நாடுகளுக்கு விஜயம் செய்து ஆங்காங்கே பற்பல கௌரவங்களைப் பெற்றவர். சுமார் 40 ஆண்டுகளாக ஆசிரியப்பணியிலீடுபட்டிருக்கும் இவர் சில நாட்களுக்கு முன்புதான் சென்னைப் பல்கலைக்கழக ரசாயனத்துறையின் தலைமைப் பேராசிரியராக ஓய்வு பெற்றார் ஆயினும் அப்பணியில் தமக்கு இருக்கும் ஆர்வம் காரணமாகத் தொடர்ந்து கௌரவப் பேராசிரியராகப் பணி புரிந்துவருகிறார்.

இப்படி லௌகிக நிலையின் உச்சியில் இருப்பவர்களுக்கு வைதிகத்தில் பற்று இருப்பது விசேஷமான அம்சம். அத்துறையில் ஞானம் பெற, மகாவித்துவான்களின் உபந்யாசங்கள் கேட்பதே சிறந்தவழி. Dr. V. V. ராமாநுஜம் அவர்கள், 40 வருடங்களுக்கு மேலாக ஸ்ரீ உ. வே. மகாவித்வான்களான பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி, காரப்பங்காடு வெங்கடாசாரியர் ஸ்வாமி, சதாபிஷேகம் கோவிந்தநரஸிம்மாசாரியர் ஸ்வாமி, காரப்பங்காடு ரங்கராமாநுஜய்யங்கார் ஸ்வாமி, நல்லான் ராமகிருஷ்ணயங்கார் ஸ்வாமி, வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி என்றிப்படி பற்பல வித்வான்களிடமும் ஸ்ரீபாஷ்யம் பகவத் விஷயம் போன்ற பலகிரந்தங்களைப் பலகால் கேட்டு அனுபவித்து, நடமாடும் பொக்கிஷமாகத் திகழ்பவர். அத்தனை வித்வான்களது உபந்யாசங்களையும் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறார். அவற்றையெல்லாம் திரட்டி வெளியிட்டால் அதுவே நமது ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்திற்குப் பெரும் நிதியாகும்.

இப்படித் தாம் பயனடைவது போலவே பலரும் பயனடைய வேண்டும் என்ற பரந்த நோக்கில் பற்பல ஸபைகளின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து வருகிறார். திருவல்லிக்கேணியில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இயங்கிவரும் வேத வேதாந்த வர்த்திநீஸபையின் பொருளாளராக இருந்து

கொண்டு அரிய பணிகளைப் புரிந்து வருகிறார். திருவல்லிக் கேணித் தென்னாசார்யஸம்ப்ரதாய ஸபையின் தோற்றத்தில் பெரும் பங்கு வகித்ததோடல்லாமல் அச்சபையின் உபதலைவராயிருந்து அச்சபை தினமும் நடத்தி வரும் ஸ்ரீபாஷ்ய பகவத் விஷய காலக்ஷேபங்களைத் தாமும் கேட்டனுபவித்து பிறரும் அனுபவிப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார். திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி கோயிலில் எழுந்தருளியிருக்கும் மணவாளமாமுனிகள் கைங்கர்ய ஸபையின் தலைவராயிருந்து உத்ஸவங்களைத் திறம்பட நடத்திவருகிறார். தமதாசார்யரான ஸ்ரீ உ. வே. முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை சிஷ்யர்கள் ஸபையின் செயலாளராக இருந்து அச்சபை வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து வருகிறார்.

ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி ஸந்நிதியில் நடக்கும் பல நிகழ்ச்சிகளிலும் கைங்கர்யம் பண்ணுவதில் மிகவும் ஊக்கமுடைய இவர் ஸேவை சமயங்களில் பெருமாளுக்கு ஸ்ரீபாதம் தாங்குவது முதல் கோஷ்டிகளிலும் கலந்து கொள்வது வரை பெரும்பாலும் விடாமல் அந்வயிப்பதைக் காணலாம்.

இப்படி எல்லாவகையிலும் சிறந்தவராய் இருப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அத்தகையவர்களும் மற்றவர்களுடன் பெருமை சிறுமை பாராமல் கலந்து பழகுவது என்பது மிகவும் அரிது. ஆனால் இத்தனை பெருமைகளையும் ஒருங்கே உடைய ஒருவர் என்போன்றவர்களுடனும் இரண்டறக் கலந்து பழகும் பெருந்தன்மையை அனுபவித்தே அறியவேணும்.

அப்படிப்பட்ட பெரியவர் பேராசிரியர் Dr. V V. ராமாநுஜம் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்திவிழா 28-9-80 அன்று நடைபெற்றது. அவ்விழாவினைக் கண்டுகளிக்க வந்திருந்த வைதிகத் துறைப் பிரமுகர்களையும் லௌகிகப்ரமுகர்களையும்

கொண்டே இருதுறைகளிலும் அவர் எவ்வளவு மேன்மையானவர் என்று அறிந்துகொண்டுவிடலாம். அவர் ஷஷ்டியப்த பூர்த்தி கொண்டாடும் இந்நாளில் அவரது பெருமைக் கடலில் ஒரு சில திவலைகளை நினைவுகூர்வதோடல்லாமல் அவர் மேலும்பல்லாண்டுகள் நலத்தோடு வாழ்ந்து வைஷ்ணவ சம்ப்ரதாயத்திற்குத் தொண்டு புரியும் வலத்தை அவருக்கருளுமாறு ஆரக்கணக்கான கீதாசாரியன் வாசகர்கள் சார்பில் கீதாசார்யனை வேண்டுகிறேன்.

வேங்கடகிருஷ்ணன்

ஆசிரியர்.

---

ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி
ஷஷ்டியப்த பூர்த்திக் கமிட்டி வெளியிடான

# நாலாயிர திவ்யப்பிரபந்தம்

(மலிவுப்பதிப்பு — விலை ரூ. 10)

19—10—80 விஜயதசமியன்று பிற்பகல் 3-30 மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிஸ்வாமி கோயில் திருவாய்மொழி மண்டபத்தில் வெளியிடப்படும். பற்பல வித்வான்களும் பிரமுகர்களும் கலந்துகொள்வார்கள்.

அனைவரும் வருக.

# தெய்வவண்டு

நம்மாழ்வார் திருவாய்மொழியில்* தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு* என்றவிடத்தில் எம்பெருமானை வண்டாக அருளிச்செய்தார்.

வண்டு ஸாரக்ராஹி யெனப்படும். கமலமலரிற் படிந்து அங்குள்ள ஸாரத்தை யெடுத்து ஜீவிக்குமது வண்டு. எம்பெருமான் *போதிற்கமல வன்னெஞ்சம்* என்றும், *பக்தாநாம் யத் வபுஷி தஹரம் பண்டிதம் புண்டரீகம்* என்றும் சொல்லப்படுவதான பக்தர்களின் ஹ்ருதய புண்டரீக மலரிற் படிந்து அங்குள்ள ஸாரத்தைக் கவர்ந்து களிப்பவனென்று ப்ரஸித்தம்.

### ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்

## அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

வண்டு பத்மாபிநிவேசமுடையது; எம்பெருமானும் பத்மாபிநிவேசமுடையவன். (இது சிலேடை) பத்மே அபிநிவேச:- பத்மாயாம் அபிநிவேச:=பத்மமென்கிற தாமரையிலே வண்டுக்கு ஆவல். பத்மையான பிராட்டியினிடத்தில் அபிநிவேசம் எம்பெருமானுக்கென்று கண்டு கொள்வது.

சாகாஸஞ்சாரமுடையது வண்டு; எம்பெருமானும் அப்படிப்பட்டவனே. (இதுவும் சிலேடை.) சாகை என்று கிளைக்கும் வேதங்களுக்கும் பெயர்; வண்டு கிளைகளிலே ஸஞ்சாரமுடையது; எம்பெருமான் வேதங்களிலே.

வண்டு செவிக்கின்பமாக கீதம் பாடும். எம்பெருமானுமப்படியே. *குழலினோசை செவியைப்பற்றிவாங்க*

*த்வம் தேஷ்வந்யதமாம் பநூவித பவத்வேணு கீவநேணுந் மாதநே* என்றவை காண்க. 'உருகாய:' என்று எம்பெரு மானுக்கு வேதமிட்ட திருநாமம்.

வண்டு ஜாதியில் ஒன்றாக ப்ரஸித்தமான வேட்டுவேளான் (குளவி) மிக அற்பமானதொரு புழுவைக் கொண்டு வைத்து ஊதித் தன்னோடு ஒற்றுமை பெற்றதாக்கும்படியைக் காணு நின்றோம். "குளவி தன்னிறமாகும்" என்கிற பழமொழி யும் ப்ரஸித்தம். எம்பெருமானும் *பொருளல்லாத வென்னைப் பொருளாக்கியடிமை கொண்டாய்* என்றும், *தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே யொக்க அருள் செய்வர்* என்றும் சொல்லுகிறபடியே அவஸ் துவாய்க் கிடக்கிற ஆத்மவஸ்துவின் சிறுமைபாராதே தன்னோ டொத்ததாம்படி செய்தருளுமவன்.

வண்டு சோலைகளிலேயே சுழலமிடும். எம்பெருமானும் *வண்டினமுரலுஞ்சோலை மயிலினமாலுஞ்சோலை கொண்டல் மீதணவுஞ்சோலை குயிலினங்கூவுஞ்சோலை, அண்டர் கோனமருஞ்சோலை யென்னும்படியான *ஆராமஞ்சூழ்ந்த வரங்கம் முதலான திருப்பதிகளிலேயே அநுரக்தன்.

வண்டு மதுவைப்பருகித் தென்னதெனவென்று முரலும். *தென்னதெனவென்று வண்டுமுரல்* என்றாரே நம்மாழ்வார். எம்பெருமானும் தொண்டர்களின் அமுதவாக்கைப் பருகித் தென்னவென்று தெருட்டாடுகிறானென்பதை நம்மாழ்வார் தாமே *பண்ணார் பாடலின்கவிகள் யானாய்த் தன்னைத் தான் பாடித் தென்னாவென்னு மென்னம்மான் திருமாலிருஞ்சோலை யானே* என்கிற பாசுரத்தினால் காட்டியருளினார்.

இங்ஙனே மற்றும் பலவகையான உவமைப் பொருத்தங் களுங் கண்டுகொள்வது.

# தன்னரியனுக்குத் தானடிமை...

"மணவாளா! திருப்பரியட்டங்களைத் துவைப்பதை விடுத்து அங்கு என்ன அப்படிப் பார்த்துக் கொண்டிருக் கிறாய்?" என்று தன் சகாவைப் பார்த்துக் கேட்டான் குளித்து முடித்துக் கரையேறிய சடகோபன்.

"அங்கேமண்டபத்தில் பார் சடகோபா, நம் ஸ்வாமி திரு மண்காப்பு சாற்றிக் கொண்டிருக்கும் காட்சியை. அவர் அழகிய திருமேனியில் சூரிய கிரணங்கள் பட்டுத் தெறித்து ஜ்வலிக்கும் அக்காட்சியைவிட்டுக் கண்கள் நகரவே மறுக் கின்றனவே. மற்றுமொரு சூரியனாகவே பொன் மயமாகப் ப்ர காசிக்கிறார் பார். என் கண்ணே பட்டுவிடும் போல் இருக் கிறது" என்றான் மணவாளன்.

## இளையவில்லி

"ஆம் மணவாளா; அவருடைய இந்தத் திருமேனி ப்ர காசத்தாலும், திருவாக்கு வன்மையாலும் அன்றோ தற்கச் சமணரும், சாக்கியப் பேய்களும், தாழ் சடையோன் சொற் கற்ற சோம்பரும், சூனிய வாதரும் பயந்து தோற்றோடிப் போயினர்"—சடகோபன்.

இவ்வாறு உடையவரின் சிஷ்யர்களான சடகோபன் என்பவனும், மணவாளன் என்பவனும் காவேரியில் நீர்த்த மாடி தம் ஆசார்யரின் திருப்பரியட்டங்களை அலசியவாறே உரையாடிக் கொண்டிருந்தனர். இருவருமே மிகவும் இளம் பிராயத்தினர். ஸ்ரீ ராமநுஜரின் அருகிலேயே இருந்து குற்றேவல்களைச் செய்யும் பேறு பெற்றவர்கள்.

"மணவாளா நாழிகை ஏகமாக ஆகிவிட்டது. சூர்யோதய மாகிப் பத்து நாழிகைப் பொழுதில் என்ன வெயில்; காவேரி

மணலில் கால் வைக்கவே முடியாது போலிருக்கிறதே, இன்று ஸ்வாமி நீராட்டத்துக்கு ஏனோ இத்தனை தாமதமாகி விட்டது; மணற் பரப்பை இன்று எப்படிக் கடந்து மடத்துக்குப் போய்ச் சேரப் போகிறோமோ? மேஷ மாஸத்து (சித்திரை) வெயிலுக்குக் கேட்கவா வேண்டும். ம், ம். புறப்படு போகலாம்''—சடகோபன்.

''இதோ கிளம்பி விட்டேன்.''

இருவருமாகக் கரையேறி நடக்க ஆரம்பிக்கின்றனர். அப்பொழுது காவேரியின் மணற் பரப்பின் அந்தக் கோடியில் பத்துப் பதினைந்துபேர் ஒரு கோஷ்டியாக வருவதைக் காண்கின்றனர்.

''இந்த வெயிலில் இங்கு வருவது யார் சடகோபா''

அந்த கோஷ்டி சற்று அருகே வந்ததும், ''ஆஹா! நம் பரமாசார்யர் திருக்கோட்டியூர் நம்பிகளன்றோ தன் சிஷ்யர்களுடன் வருகிறார்'' என்றவாறே தன் நடையைத் துரிதப் படுத்தினான் சடகோபன். மேலும் ''திடீரென்று புறப்பட்டு வந்திருக்கிறாரே என்ன காரணமோ? மடத்திலேயே இருந்திருக்கலாமே, இந்த வெயிலில் காவேரிக் கரைக்கே வந்து நம் ஆசார்யரைச் சந்திக்கும் படியாக என்ன அவசரமான விஷயமோ,'' முதுமை காரணமாக அவருக்கும் இந்தக் கடும் வெயிலில் நடக்கவே முடியாமல் தள்ளாடி வருகிறாரே'' என்றெல்லாம் பேசிய படியே நடந்தான் சடகோபன்.

தம் ஆசார்யரான திருக்கோட்டியூர் நம்பிகள் வருவதைக் கண்ணுற்ற ஸ்ரீ ராமாநுஜர் மண்டபத்திலின்றும் இறங்கி ஓடோடியும் வந்து தம் ஆசார்யரை எதிர் கொண்டழைக்க விரைந்தார். சிஷ்யர்களும் உடன் விரைந்தனர்.

மணற் பரப்பின் நட்டநருவில் இரு கோஷ்டியினரும் சந்தித்துக் கொண்டனர்.

ஸ்வாமி......... என்றவாறே நெடுஞ்சாண் கிடையாக தெண்டன் சமர்ப்பித்தார் ஸ்ரீ ராமாநுஜர். தம் ஆசார்யரைக் கண்டவாறே அந்தக் காவேரி மணலின் சூட்டைக் கூடப் பொருட்படுத்தாமல் நெடுஞ்சாண் கிடையாக ஸேவிக்கப் புகுந்த அவரின் ஆசார்ய பக்தி தான் எவ்வளவு உயர்ந்தது!

இரு கோஷ்டியினரும் தத்தம் குருக்களின் பின்னால் அப்படி அப்படியே நின்று விட்டனர்.

ஸ்ரீ ராமாநுஜரின் ஆசார்யருள் ஒருவரான திருக் கோட்டியூர் நம்பிகளோ, நீண்டு கூப்பியபடி கிடந்த தம் சிஷ் யரின் இரு கைகளையும், முப்புரி நூலுடன் திகழ்ந்த பரந்த முதுகையும், மணலில் அதுவும் வெயிலில் ஓடோடியும் வந்த தால் மேலும் சிவந்து விட்ட, தாமரைப் புஷ்பங்களை யொத்த அவர்தம் திருப் பாதங்களையும் மாறி மாறிப் பார்த்தார்; பார்த்தார்; பார்த்துக் கொண்டே இருந்தார். இவ்வாறு உடையவர் தெண்டன் சமர்பிக்கும் சமயங்களில் வாத்ஸல்யத் துடன் ஒரு குழந்தையை அழைக்கும் தினுசில் "அப்பா ராமாநுஜா" என்றழைத்தவாறே கைலாகு கொடுத்து எழுப்பி சேர்த்தணைத்துக் கொள்ளும் வழக்கமுடை அவர் இன்று கடும் வெயிலையும் பொருட்படுத்தாது, "எழுந்திரு" என்றும் சொல் லாமல் மௌனம் சாதிப்பது ஏன் என்று புரியாமல், ஆனால் எழுந்திருக்க அவர் அநுமதியை எதிர்பார்த்து எழுந் திருக்காமல் ஸேவித்த வண்ணமே இருந்தார் குணந்திகழ் கொண்டலாம் ஸ்ரீராமாநுஜர்.

ஆயிற்று அரைநாழிகைப் பொழுதும் ஓடிவிட்டது. ராமாநுசமுநிவேழமாகவே கிடக்கையில் கிடந்த ஸ்ரீ உடைய வரின் முதுகையே வெறித்துப் பார்த்த வண்ணம் நின்ற நம்பிகளின் மௌனம் கலையவில்லை.

இருவரின் சிஷ்யர்களோ தவித்தனர்; கலங்கினர், கரைந் தனர். அவர்களால் நிற்கக்கூட முடியவில்லை. கால்களை

மாற்றி மாற்றி வைத்தபடி துடித்தனர். சிலருக்கோ கால்கள் கொப்பளித்து விட்டன.

ஒரு நாழிகைப் பொழுதும் ஓடிவிட்டது. வெயில் மேலும் உக்ரமாகியது. சிஷ்யர்கள் மனதில் திகில் பரவ ஆரம் பித்தது.

"சடகோபா நான் சொன்னபடியே என் பொல்லாத கண் த்ருஷ்டி பட்டுவிட்டது. நம் ஸ்வாமியின் திருமேனிக்கு இன்று அவர் திருமேனி வாடி வெந்து விடப்போகிறதே. ஐயோ நான் என்ன செய்வேன். நம்பிகளுக்கு இன்றென்ன சித்தம் கலங்கிவிட்டதா? தம் உயிருக்குயிரான ராமாநுஜரை இப்படி சோதிக்கிருரே" என்று சடகோபன் காதோடு புலம்பத் தொடங்கினுன் மணவாளன்.

மேலும் அரை நாழிகைப் பொழுது நம்பிகளின் மௌனத்திலேயே கரைந்தது. நல்வார் பரவுமிராமாநுசரோ தன் திருமேனியில் துளிக்கூட வாட்டம் காட்டாமல் அப்படி இப்படி அசையாமல் கைகள் கூப்பிய வண்ணம் ஸேவித்த படியே கிடந்தார். திருக்கோட்டியூர் நம்பிகளோ கற்சிலை யென நின்று கொண்டிருந்தார். ஆனல் ஒரு மாற்றம். அவர் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக வந்த வண்ண மிருந்தது. வாய் திறக்கவில்லை. சூரிய பகவானே இந்தச் சோதனைக் காட்சியைத் தன் கண்கள் மலரக் காண்கிருனே என்றெண்ணும்படி ஆரவாரமாக வெங்கதிர்களை வீசியபடி உச்சி வானத்துக்கு வந்து விட்டான்.

"இனி தாங்காது" என சிஷ்யர்கள் வேதனையும் ஆத்திர முமாக நினைத்த சமயத்தில் "எம் ஸ்வாமியைக் கொல்லவந் திரோ பிராமணரே" என்றவாறே கூச்சலிட்டு ஆங்காரத்துடன் கூட்டத்தினின்றும் சீறிப்பாய்ந்து மணற்பரப்பில் நம்மிராம

நுசர் பக்கத்தில் மல்லாந்து விழுந்து, அவரை அப்படியே இருந்த நிலையிலேயே, ஸேவித்தபடி இருக்கும் அதே நிலையில் தன் மார்பின் மீது கிடத்திக் கொண்டார், திக்குற்ற கீர்த்தியி ராமாநுசரின் சீடர்களில் ஒருவரான கிடாம்பியாச்சான். "ஆஹா! ஆஹா!" என்று ஆஹாகாரம் எழுந்தது சீடர்களின் நடுவே

கிடாம்பியாச்சானின் இச்செயலுக்குப் பின் சட்டென்று மௌனம் கலந்தவராகத் திருக்கோட்டியூர் நம்பி கண்களில் பெருகும் நீரோடு, நடுங்கும் கைகளால் "அப்பா எழுந்திரப்பா, ஐயா எழுந்திரப்பா" என்று நாத்தழுக்க இருவரையும் கைலாகு கொடுத்து எழுப்பி நிறுத்தினார். பிறகு கிடாம்பி யாச்சானை அப்படியே சேர்த்து அணைத்து ஆசிர்வதித்தார். அத்துடன் அவர் சொன்ன செய்தியைக் கேட்ட அனைவரது நெஞ்சிலும் தீப்பிடித்தாற் போல் இருந்தது. இக்கொடுமை யான சோதனையின் காரணமும் புரிந்தது.

அவர் சொன்ன விஷயம் இது தான். பொய்த்தவம் போற்றும் புலைச் சமயங்கள் நிலத்தவியக்கைத்த மெய்ஞ் ஞானத்து ராமாநுசரைச் சில கொடும்பாவிகள் அவருடைய ஆகாரத்தில் விஷமிட்டுக் கொல்ல முடிவு செய்திருப்பதாக நம்பகமான மனிதர்கள் மூலம் தெரிந்ததாம். தகவல் தெரிந்த தும் அடுத்து அரைக்கணம் கூட அங்கிருக்கப் பொறுக்காமல் தன்னுயிர்ச் சீடரைக் காணும் பொருட்டு கிளம்பி விட்டிருக் கிறார் நம்பிகள். உடையவர் நீராட்டத்துக்காகக் காவேரிக்கு சென்றிருப்பதை அறிந்து அங்கேயே சந்தித்து விடலாம் என்று வரும்பொழுதே அவர் மனதில் ஒரு யோசனை தோன்றி யதாம் "இனி எனக்குற்ற செல்வமிராமாநுசரின் ஆகார விஷயங்களைக் கவனித்துக் கொள்ள தகுந்த ஒருவரை நியமிக்க வேண்டும். அந்த ஒருவர் தன்னுயிரினும ராமாநுசரை மேலாகக் காக்க வேண்டும். அவருக்கு ஏதேனும் இடர் என்றால் முன்னின்று களைபவராக இருக்க வேண்டும். அப்படி ஒருவரைத் தேர்ந்தெடுக்கவே இந்தச் சோதனை. நினைத்த படியே அப்படிப்பட்ட ஒருவர் கிடைத்தும் விட்டார். இனி

நம்கிடாம்பியாச்சான்தான் உடையவரின் திருமடைப்பள்ளிக் கைங்கர்யத்தை செய்ய வேண்டும்" என்றார் திருக்கோட்டியூர் நம்பிகள்.

"உனக்குச் சம்மதம் தானேயப்பா" என்றார் கிடாம்பியாச்சானைப் பார்த்து.

அவரோ சந்தோஷ மிகுதியால் இருகைகளையும் சிரமேல் வைத்து ராமாநுஜா ராமாநுஜா என்று கூவியவாறு "பெறற்கரியது பெற்றேன், பிறவிப் பயனை அடைந்தேன். தன்னாரியனுக்குத் தானடிமை செய்வதன்றோ சிஷ்யனுக்குப் பேரின்பம். எம்பெருமானாரின் திருமடைப்பள்ளிக் கைங்கர்யத்தை செவ்வனே செய்கிறேன் ஐயா. நன்றி நம்பிகளே. நன்றி அப்பனே." என்று சந்தோஷித்தார்.

கோயிலை நோக்கி விரைந்தனர் அனைவரும்.


## ஆச்வலாயன க்ருஹ்ய கர்ம ப்ரயோகம்

இந்தப் புத்தகத்தில், ரிக்வேதிகள் செய்ய வேண்டிய த்ரிகால ஸந்த்யாவந்தனம், ஸமிதாதானம், புண்யாஹவாசனம், அக்னிஸந்தானம், ச்ராத்தம், ப்ரஹ்மயஜ்ஞம், உபாகர்மா, காயத்ரீ ஜபம் முதலியவற்றின் ப்ரயோகங்கள் தரப்பட்டு, அவற்றிற்கான விளக்கமும் குறிப்பும் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரிக்வேதிகளுக்கு இது ஒரு இன்றியமையாத நூலாகும். அத்வைதிகள் ஸ்ரீ வைஷ்ணவர்கள்-என்ற இரு வகையினருக்கும் உபயோகமானது.

350 பக்கங்கள் :- விலை மூப்பது ரூபாய்.
தபால் செலவு மூன்று ரூபாய்.

கிடைக்குமிடங்கள் :

1. V. S. வெங்கடராகவாசாரியார்,
2, ரயில்வே பார்டர் ரோடு, தாம்பரம் சானிடோரியம்,
சென்னை-47 [போன் : 49359]

2. N. V. வாசுதேவாசாரியார்,
117, K R கோயில் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை-33 [போன் 421224]

# பெயர்களாயிரம்

விசாகம்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் அடுத்த திருநாமம் (4) **பூதபவ்ய பவத்ப்ரபு:** என்பது. இதன்படி ஸ்ரீமந் நாராயணன், சென்றவை, நிகழ்பவை, வருகின்றவை ஆகிய முக்காலத்திற்கும் — முக்காலத்திலுள்ள வஸ்துக்களுக்கும் இறைவர் என்று பொருள். ஆக முக்காலத்திலும் உள்ள பொருள்கள் படைக்கப்படுவதும், காக்கப்படுவதும் அழிக்கப் படுவதும் அவனாலேயே என்று உணர்த்தப்படுகிறது. ஆனால் படைக்கும் தொழில் பிரமனுக்கென்றும் அழிக்கும் தொழில் சிவனுக்கென்றும் கூறப்படுகிறதே—அது பொய்யா என்ற கேள்வி எழும். அடுத்த சில திருநாமங்கள் இதற்கு விடையளிக்கின்றன.

(5) **பூதக்ருத்** எல்லாப் பொருள்களையும் தம் இச்சையினால் படைப்பவர். பிரமனுக்கு அந்தர்யாமியாயிருந்து அவனுக்குப் படைக்கும் சக்தியை அளிப்பவர் இவரே யாதலால் இவரே படைக்கிறார் என்பதில் தவறில்லை.

(6) **பூதப்ருத்:** எல்லா உலகங்களையும் தாங்குபவர். தாமே விஷ்ணுவாய் நின்று உலகங்களைக் காக்கும் தொழிலைச் செய்கிறார்.

(7) **பாவ:** எல்லாப் பொருள்களையும் தனக்கு அணியாகக் கொண்டிருப்பவர். மயிலுக்குத் தோகை அலங்காரமாகவுள்ளது. விரும்பாதபோது சுருக்கி வைத்துக் கொள்கிறது. விரும்பியபோது விரித்துக் கொள்கிறது. மீண்டும் தன் உடலுக்குள்ளேயே சுருக்கிக் கொண்டுவிடுகிறது. அதுபோல, பகவானும் எல்லாப் பொருள்களையும் படைத்து, விருத்திசெய்து முடிவில் தன்னையே வந்தடையும்படி செய்கிறார்.

# திருமங்கை நாயகி

பேராசிரியர் மணவாளன் M.A.B.O.L.

அன்று அவள் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டிருந்தாள். கருங்கூந்தலைக் காற்றில் அசையாதபடி மேனே தூக்கி முடித்துக் கொண்டையணிந்திருந்தாள். அளவோடு அழகான கச்சும் பொருத்தமாக இருந்தது. இடையில் ரத்தினங்களிழைத்த மேகலை அழகாக விளங்கியது. மை தீட்டப்பெற்ற கண்கள். கையில் அழகான பந்து. இப்படி நின்று கொண்டிருந்த அத்தலைவியை எல்லோரும் ஒரே சமயத்தில் கூப்பிட்டார்கள். ஓடிவா ஓடிவா என்றார்கள். தாய்மார்களும் தோழிமார்களும் ஏன் இப்படிக் கூப்பிடுகிறார்கள் என்று அத்தலைவியும் வாசலில் வந்து நின்றாள். தெருவில் ஒரே கூட்டம், கூட்டத்தைச் சற்றே விலக்கிக்கொண்டு முன்னே சென்றாள்.

அங்கே தான் அவள் அவனைக் கண்டாள். இரண்டு குடங்களைக் கையிலேந்தி அப்பெரிய வீதியிலே அவன் ஆடிய குடக்கூத்து. என்ன அழகு! என்ன அழகு! தாமரை போன்ற திருக்கண்கள். மயக்கவல்ல மதிமுகம். யாவரும் மகிழ அவன் ஆடிய குடக்கூத்து. கூத்தாட்டத்தின் நடுவே அவ்வப்போது அவன் அவளைப் பார்த்த பார்வை. அவ்வளவுதான் அவள் நிறமிழந்தாள்; வளையல்களை இழந்தாள். துரும்பாக இளைத்தாள்.

தோழிமார்கள் தலைவியை ஒருவாறு தேற்றி உள்ளே அழைத்து வந்தார்கள். படுக்கையின் படுக்க வைத்தார்கள். பல உபசாரங்களைச் செய்தார்கள். ஒன்றுக்கும் பயனில்லை. அவளுடைய அன்னை அவளருகிலேயே உட்கார்ந்து ஆறுதல் கூறினள். என் மகள் உற்ற நோய் யாதோ அறியேன் என்று

வருந்தினான். பின்பு ஒருவாறு மனம்தேறிச் சிறந்த பாகவதர்களுடைய பாததூளியைக் கொண்டு வந்து தன் மகளுக்கு ரக்ஷையாகக் காப்பிட்டாள். வழக்கத்திற்கு மாறாக சாஸ்தா என்னும் தெய்வத்திற்கு அஞ்சலி செய்து வேண்டிக் கொண்டாள. இப்படிப் பலவகையான உபசாரங்களாலும் வேண்டுதல்களாலுங்கூட அத்தலைவியின் உடம்பு குணமாகவில்லை.

அச்சமயத்தில் அங்குச் சில வயதான பாட்டிமார்கள் வந்தார்கள். "நோயின் நிதானமறியாமல் மனம் போனபடி ஏதேதோ செய்கிறீர்கள்; இவள் உற்ற நோயை அறிய ஒரே வழிதான் உண்டு. அதாவது ஊரெங்கும் திரிந்து வரும் குறத்திமார்கள் இப்போது நம்மூருக்கு வந்துள்ளனர். 'கட்டுவிச்சி' என்று சொல்லப்படும் அக்குறத்தியரை இங்கு வரவழைத்துக் குறி கேளுங்கள். அப்போதுதான் இந்நோய் யாது? இந்நோயை விளைவித்தவன் யார்? என்பதெல்லாம் தெற்றென விளங்கும்" என்றனர்.

அச்சமயத்தில் குறிசொல்லும் குறத்தியொருத்தி தன்னை அழையாதிருக்கச் செய்தேயும் தன் வரலாறுகளைச் சொல்லிக் கொண்டு அங்கே வந்தாள். அவளை வரவேற்று அமரச் செய்தனர். பின்பு அவள் கேட்டபடி ஒரு முறத்திலே நெல்லைக் கொண்டுவந்து வைத்தனர். அக்குறத்தியும் நோயுற்ற அப்பெண்ணைப் பார்த்தாள்; உடனே அவள் தெய்வ ஆவேசம் கொண்டாள். அச்சிறு முறத்திலிருந்து ஒரு பிடி நெல்லையெடுத்து முன்னே விசி எறிந்தாள். அந்நெல் மணிகளை எண்ணிப் பார்த்து ஒற்றைப்பட்ட எண் வருகிறதா, இரட்டைப்பட்ட எண் வருகிறதா என்று பார்த்தாள். அவ்வளவில் அக்குறத்தியின் உடம்பெல்லாம் தெய்வ வசத்தால் வேர்வை விட்டு ஆடியது, மயிர்க் கூச்செறிந்தது. மேலும் அக்குறத்தி அடிக்கடி கையை மோந்து பார்த்தாள். யாரால் இந்நோய் வந்தது என்று உடனே தெரிந்துகொண்டாள்.

எல்லோரையும் கூவி அழைத்து, பேராயிரமுடையானே இவளுக்கு இந்நோயை உண்டு பண்ணினான் என்றாள். மேலும் அவனுடைய கரியதிருமேனியையும் சீரார் வலம் புரியையும் திருத்துழாய் மாலையையும் பாவனையால் காட்டினாள்.

"நோய் செய்தவன் யார் தெரியுமா? முன்பு மகாபலியைப் பாதாளத்தில் சிறைவைத்தானே — உலகத்தையெல்லாம் அளந்தானே அவனே தான்! குளவிக் கூடுபோலே அரக்கர்கள் மலிந்த இலங்கையை நீறாக்கியும், கடல் கடைந்து அமுதம் அளித்து, குன்றெடுத்துக் கோநிரை காத்தும், எல்லா உலகங்களையும் பிரளயவெள்ளம் கொள்ளாதபடித் தன் வயிற்றிலே யடக்கியும் இப்படிப் பலவிதமாகத் தன்னுடைய சிறந்த குணங்களை வெளிப்படுத்தினானே அவனே தான் நும்மகளை நோய் செய்தான்" என்றாள்.

உடனே தாய் பதறி இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்த அந்தப் பெரியவன் என் பெண்ணுக்கு நல்வாழ்வு அளிப்பானா என்று ஏக்கத்தோடு கேட்டாள்.

உடனே அக்குறத்தி "மிகப் பெரிய செயல்களைச் செய்த அம்மாயவன் எவ்வளவு எளிமையானவன் தெரியுமா" என்று அவனுடைய எளிமையை வருணிக்கத் தலைப்பட்டாள்.

முன்பு யசோதைப் பிராட்டியானவள் தன் இடுப்பு நோகவும், நெற்றி வேர்க்கவும் வெகு நேரம் கஷ்டப்பட்டு கடைந்தெடுத்த வெண்ணெயை வாரி அமுது செய்துவிட்டு ஒன்று மறியாதவன் போல் நெடுங்குறட்டை விட்டுக்கொண்டு உறங்குவானாயினான்.

மீண்டும் வந்த யசோதை வெண்ணெய் களவு போயிருப்பதைப் பார்த்து கண்ணனை எழுப்பி நீதான் இக்களவு செய்தாய் என்று கடிந்து கையிலகப்பட்ட ஒரு கயிற்றாலே அவனை அருகேயிருந்த உரலிலே கட்டிப் போட்டாள். ஊரா ரெல்லாரும் கண்டு கைகொட்டிச் சிரிக்கும்படி அவனை அடிக்கவும் முற்பட்டாள்.

அப்படிப்பட்டவன்தான் உன் மகளை நோய் செய்தான், அஞ்சாதே என்றாள். மேலும் யமுனையாற்றின் மடுவிலே தன்னுடைய விஷத்தாலே கொடுமை செய்து வந்த காளியன் என்னும் நாகத்தையடக்கி அதன் முடிமேல் நர்த்தனம் செய்தவனும், சீதைக்கு நான் சமானமானவள் என்று சொல்லி தன்னை மணந்து கொள்ளும்படி வற்புறுத்திய சூர்ப்பணகையின் காதையும் மூக்கையும் அறுத்தவனும், இராவணனை முடித்தவனும் நரசிங்கமாய்த்தோன்றி இரண்யனுடைய மார்பைப் பிளந்தவனும் இப்படிப் பல வைபவங்களையுடையவனுமான அப்பரம் பொருளேதான் உன் மகளை நோய் செய்தான் என்றாள்.

ஆனால் இவ்வித வரலாறுகளையுடைய அவன் மிகவும் இரக்ககுண முடையவன். அடியார்களைக் காப்பாற்றுவதில் அவனுக்கு அவனேதான் நிகர். முன்பு பொய்கையில் முதலைவாய்ப்பட்ட கஜேந்திரன் 'நாராயணா ஓ மணி வண்ணா நாகணையாய், வாராய் என்னாரிடரை நீக்காய், என்று கூவியழைத்த போது ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து அப்பொழுதே பொய்கைக்கரை வந்து முதலையைக் கொன்று யானையைக் காப்பாற்றியவன் அவன். அப்படிப்பட்ட கருணையே வடிவெடுத்த பேராயிர முடையான் தான் பேய்ப் பெண்டீர் நும்மகளைத் தீரா நோய் செய்தான் என உரைத்தாள்.

உடனே தாய், அப்படியாகில் தோழிமார்களே அப்பெரியவனிடமிருந்து அவன் பிரஸாதமாக இவள் நோய் தீர்க்க அவன் திருத்துழாய் மாலையைப் பெற்று வருவீர்களாக என்று சொல்லி ஒருவாறு மனம் தேறியிருந்தாள்.

ஆனால் அத்தலைவிக்குத் துன்பம் தீரவில்லை, அவனைக் கண்டது முதல் அவள் நிலைகுலைந்து வாடியேபோய்விட்டாள்.

அதனால் அவள் தன் நெஞ்சையே அப்பெருமானிடம் தூது விட்டாள். ஆனால் அந்நெஞ்சோ அவ்வெம் பெருமா

ளிடம் லயித்துத் திரும்பிவாராமலே அங்கேயே தங்கிவிட்டது. தலைவி என் செய்வாள் பாவம். ஊணும் உறக்கமுமில்லை, உதவு வாருமில்லை. ஆதலால் வாசவதத்தை யென்பவள் தன் தோழிமார்களையெல்லாம் விட்டு விட்டு, பெரிய தெருவழியே தன் ணைவனோடு போனாப் போலே நானும் தெருவேறப் புறப் பட தான் போகிறேன், மடலூரத்தான் போகிறேன் என்றான்.

காமம் தலைக்கொண்ட அவன், கானமேகத் திருவுருவம் கொண்ட அத்தலைவனின் திருவுருவைக் கண்டுகளிக்கும் வரையில் சீரார் திருவேங்கடம் திருக்கோவலூர் என்று தொடங்கிப் பாரோர் புகழும் வதரி வடமதுரை வரை சென்று செங்கண் நெடியானாய் தென்னுமாய் நாரானாய் தாமரை போல் கண்ணனாய் விளங்கும் அவனுடைய ஆயிரநாமங்களையும் வாயால் பிதற்றிக்கொண்டு பெரிய தெருவழியே என்னை ஊரார் பழித்தாலும் மடலூர்வதை நிறுத்த மாட்டேன் என்று சபதம் செய்தான். கருணை காகுத்தனான கண்ணன் பரகாலநாயகியை மடலூர விடுவானா! உடனே ஓடோடி வந்து திவ்விய மங்கள விக்ரஹத்தைக் காட்டி ஆட் கொண்டான் என்பதே ஆன்றோர் முடிவு. இது சிறிய திருமடலின் சாரமே.